# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬௵ அக்டோபர்மீ ௭௨. [இல. ௬.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸ்வஸ்தி ஶ்ரேயம், தமேதா
யஸ்த்ரி தாரம் தஸ்ய ப்ரவர்த்தநாயம், யதேதஸ்மிந் ப்ரீதிஸ்தஸ்ய ப்ரியகார்யஸாதநஞ்ச, ததே
கமேவோபாஸநமேவ...

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

---

## அட்டவணை.

---

### விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | கடவுள்துதி | ௯௯ |
| ௨. | விளம்பரங்கள் | ௧௦௦ |
| ௩. | தெலுங்கு தத்தவபோதினி விளம்பரம் | ௧௦௧ |
| ௪. | தத்துவபோதினி | ௧௦௨ |
| ௫. | பிரம்மதருமம் | ௧௦௫ |
| ௬. | வேளாண்மை | ௧௦௬ |
| ௭. | மாதுவாச்சல்லியம் | ௧௦௭ |
| ௮. | அமிர்தவசனி | ௧௦௮ |
| ௯. | நிருபம், | ௧௧௨ |
| ௧௦. | ஷை நெஞ்சத்திற்கோர்சொல் | ௧௧௩ |


---

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

---

### கடவுள்துதி.

இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

அன்பர்சுவரூபமென்றும் - நாசமில்லதேர்.

அநுபல்லவி.

நாசமில்லதேர்ஒன்றும் - நாசமில்லதேர் - உன்றன்
இன்பமுண்டபிறகு - துன்பம்பறக்குமன்றோ......(அன்பர்.)

சரணங்கள்.

க. தாமரையிலைமேலே - தண்ணீர்விழுந்தவாறே,
பாமரர்கள்நடுவிலே - பற்றின்றிவாழ்வாரன்றோ....(அன்பர்.)

உ. பாவனமாமுன்திருச் - சேவகத்தொழிலாமவர்,
ஜீவனமபகரிக்க - மேவலர்வெகுசிலரால்..........(அன்பர்.)

ங. கள்ளர்களெல்லாங்கூடிக் - கொள்ளையடித்தாலுமவர்,
உள்ளவனாயுமிங்கு - எள்ளளவுங்குறைவில்லை......(அன்பர்.)

ச. கள்ளவழியிலதைக் - கொள்ளையிடுவோருமந்த,
வள்ளலுக்கடிமையாகித் - தள்ளருஞ்செல்வமடைவார்.(அன்.)

ரு. தீபச்சுடரையேற்றி - துணியில்மறைக்கிலதின்,
சோபைகுறைந்துபோமோ - சோதிவளருமோதான்.(அன்.)


## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

| | |
|---|---|
| சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................... | க - அ - 0 |
| அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். | உ - 0 - 0 |
| பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ..... .........| க - கஉ - 0 |

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாரும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

| | |
|---|---|
| கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். | 0 - ச - 0 |
| தபால்கூலி.......... | 0 - க - 0 |
| தெலுங்கு பாலவியாகரணம்... | 0 - ச - 0 |
| தபால்கூலி.......... | 0 - க - 0 |

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்ருய் பயிண்டுசெய்தது,........... 0 - அ - 0

தபால்கூலி........... 0 - உ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது.... .. 0 - எ - 0

தபால்கூலி........... 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ 0 - அ - 0

தபால்கூலி........... 0 - உ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

தபால்கூலி........... 0 - க - 0

௧அ௬௪௵ மேமாசம் முதல் ௧அ௬௬௵ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ௩ - 0 - 0

தபால்கூலி.......... .. 0 - ச - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

---

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨0௳ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிருேம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த்தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிருேம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிருேம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்தசிந்தையுடன் தங்கள்கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிருேம்.

---

## விளம்பரம்.

### தெலுங்கு தத்துவபோதினி.

தத்துவபோதினி என்னும் இப்பத்திரிகை, தமிழில் பிரசுரஞ் செய்வதுபோலவே தெலுங்கிலுமொன்று இயற்றக் கருதியிருக்கிருேம். இத்தெலுங்குதத்துவபோதினியும் தமிழைப்போலவே சுமார் பதினறுபக்கங்களை அடங்கியதாயிருக்கும். விஷயங்களும் சற்றேறக்குறைய தமிழ்பத்திரிகைபோலவே யிருக்கும். கடவுள் அநுக்கிரகஞ்செய்வாராகில், வருகிற நவம்பர்மாதம்முதல் இதைப்பிரசுரஞ்செய்ய என்

ணியிருக்கின்றோம்.௸ நவம்பர்மாத முதல்.முதல்தேதிதெலுங்குபத்திரிகையும் ௧௫-வ தமிழும்அச்சிடவேண்டியதாயிருக்குமாதலால்,வர்த்தகருக்கும்மற்றுமுள்ள ஜனங்களுக்கும் உபயோகப்படத்தக்க தேச வர்த்த மானங்களையும், அகவிலை முதலிய பலசங்கதிகளையும்சேர்க்கயோசித்திருக் கிறோம். இத்தெலுங்கு தத்துவபோதினி, நவம்பர் முதல்ஏப்ரல்வரையில், ஆறுமாதத்துக்கு முதல்புத்தகம் முடித்து மேமாதந்தொடங்கி, இரண்டாவதுபுத்தகமாகச் செய்யக் கருதுகின்றோம். இவ்வாறு மாதத்துக்கு, முன் கொடுக்கப்படவேண்டிய சந்தாவிவரம்.

அரைவருஷசந்தா...... 0 - ௧௨ - 0
தபால்கூலி.. ...... 0 - ௯ - 0

சந்தாசெய்ய இஷ்டமுள்ளவர்கள் கூடிய சீக்கிரத்தில் அறிவிப்பார்களென கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## தத்துவபோதினி.

### சோதரர்களே !

சகலவித்தைகளிலும், சகலகலைகளிலும், சகலஞானத்திலும்சிறந்து ஜீவகளையுண்டாக்கும் சர்வோத்கிருஷ்டமான ஞானமேவேதம் அல்லது வேதாந்தமெனப்படும். இவ்வேதமார்க்கத்தில் நின்றொழுகுதலே வைதிகம் என்னப்படும். இவ்வைதிகமார்க்கம் சமயமெனவும், மதமெனவும் பலநாமங்களால்வியவஹரிக்கப்படுகின்றது. உலகத்தில் அளவிறந்தவைதிகமார்க்கங்கள் அல்லது மதங்களுண்டென்பதை அறிந்திருக்கின்றீர்கள். இம்மதங்க ளொவ்வொன்றும் கடவுளைப்பற்றியும்மோக்ஷத்தைப்பற்றியும் அக்கடவுளைப்பிரியப்படுத்தி மோக்ஷத்தை அடையும் படியான மார்க்கத்தைப்பற்றியும் பலவாறுகூறுகின்றது. மனிதருக்குப் பிரதமபிதாவாகிய ஆதம் என்பவன் பாபஞ்செய்தமையால், உலகத்திலுள்ள யாவரும்பாபிகளென்றும், இவர்களை மீட்கும்பொருட்டு கிருஸ்து அவதரித்து தனது பிராணனை பலிகொடுத்தாரென்றும்; ஆதலால் அவரை நம்பினாலல்லது மோக்ஷங் கிடைக்க மாட்டாதென்றும் கிருஸ்து மதஸ்தர்கள் நம்புகின்றனர். அவ்வாறே மஹம்மதீய்யரும் மஹம்மதை நம்பினாலொழிய மோக்ஷங் கிடையாதென்பார். இந்நாட்டிலும்ஜைனமதஸ்தர்களுண்டு. அவர்களுக்குள்ளும் பரஸ்பரவிரோதமான பல கொள்கைகள் வழங்கி வருகின்றன.

வைஷ்ணவர்கள் நீலமேக சாமலவர்ணனாய், சங்குசக்ர கதாபாணியாய் கௌஸ்துபாபரணந்தரித்து ஸ்ரீதேவி பூதேவி நீலாதேவிசமேதனாய் வைகுண்டபுரத்தில் ஆதிசேஷன்மேல் பவ்வளித் திருக்கும் விஷ்ணு மூர்த்தியை நம்பவேண்டு மென்பார்கள். இவர்களுக் குள்ளும் அனேககக்ஷிபேத முண்டு. சிலர் விஷ்ணுவை நேரா யடையலாமென்பர், சிலர் அவர் தேவியாராகிய லக்ஷ்மியை புருஷகாரியாய் கொண்டால்தான்உய்யலாமென்பர், சிலர் ஆதிசேஷாம்சமாய் உலகத்தில் ஜன்மித்த இராமனுஜரே மோக்ஷாதிபதியென்பர். மற்றுஞ் சிலரோவெனில் தங்கள் ஆசாரியர்களை நம்பினால் கடைத்தேறலா மென்பர். சைவர்களுக் குள்ளும் வீரசைவம், பாசுபத்தியம், பசுவமதம், காணாதிபம், சாக்தேயம் எனவேறுபாடுகளுண்டு. இப்பலமதத்தருள்அநேகர்கள் பாஹ்யசின்னங்களாலேயேசித்திபெறலாமென்பர்.ரோமன் கிருஸ்துவர் சிலுவைபூணுவதினாலும், வைஷ்ணவர்கள் துவாதசநாமங்கள் சங்குசக்கிராங்கிதங்களாலும், சைவர்கள் திருநீர்ருத்திராக்ஷங்களாலும்மேன்மையடையலாமென்பர். இவர்கள் இவற்றாலேயே மோக்ஷமடையலாமென நம்பாவிட்டாலும் இவையில்லாமல்அடையக்கூடாதெனவற்புருத்திக்கூறுவர். இவர்கள் மதமெல்லாங்கூடி அபிமதமாயிருக்கின்றதேவொழியவேறில்லை. இவற்றுள் ஒவ்வொருமதமும், மஹம்மதுவைப்போல், ஒருகையில்கொரானும் மற்றொருகரத்தால்கத்தியுங்கொண்டு "நம்பினால் இதைநம்பாய்இல்லாவிடில்வதையுண்பாய்" என்பதுபோலும். இவ்வாறிருக்க, உபநிஷத்துக

ளில்சொல்லப்படுகின்ற பரமார்த்திகமார்க்கம்,ஆகியவேதாந்தம் எவ்வகைப்பட்டதென்பதைச் சற்றுவிசாரித்து இவற்றோடொப்பிட்டுப்பார்ப்போம். முண்டகோபநிஷத்து-௩-வது முண்டகம் முதலாவது அத்தியாயம்,௮-வதுவாக்கியத்தில். (இவன்) கண்களாலாவது, வாக்கினாலாவது, மற்ற இந்திரியங்களாலாவது, தபசினாலாவது,கர்மத்தினாலாவது, கிரகிக்கப்படமாட்டான். அவனருளிய ஞானத்தின் சகாயத்தால், சித்தசுத்தியுடையவன் தியானஞ் செய்துகொண்டுவந்து நிஷ்களமான (பிரமத்தை) அறிகிறான். என்றுசொல்லியிருக்கிறது. -கடோபநிஷத்து. ௬- வது வல்லி. ௧௦ - ௧௩ -௧௪ வது.வாக்கியங்களில் "அது (பிரமம்) வாக்கினாலாவது, மனதினாலாவது, கண்ணினாலாவது அடையப்படமாட்டாது, அஃதுண்டென்றுணர்த்துவோனாலன்றி அஃதெவ்வாறு பார்க்கப்படக்கூடும். அஃதிருத்தலினாலறியப்படவேண்டும், அஃதுண்மையானகருத்தினாலறியப்படவேண்டும் ; இவ்விரண்டினாலுமே. அவ்வாத்மாவின் உண்மையான தன்மை அதன் இருப்பினாலறியப் படுவதினால் விளங்குகின்றது. மனதிலுதிக்கும்பாசங்களெல்லாம் அற்றுப்போக, அநித்தியனாகிய மனிதன் நித்தியனாகி இப்பிரமத்தையடைகிறான்" என்றிருக்கிறது. ஷெ உபநிஷத்து. ௫- வது - வல்லி. ௧ - வது வாக்கியம். "அவ்விடத்து சூரியன் விளக்குவதில்லை, சந்திரனாவது நக்ஷத்திரங்களாவதுமல்ல, அவ்விடத்து அம்மின்னல்களும் விளக்குவதில்லை ; இந்நெருப்பு எவ்வாறுவிளக்கும். அவன்விளங்கினால் அவன்பின்னேஎல்லாம்விளங்கும்." முண்டகோபநிஷத்து௩-வதுமுண்டகம்-௨-வது அத்.௩-வதுவாக்கியம். "வேதமறிவதினாலாவது,அதைஅத்தியயனஞ்செய்வதினாலாவது, அல்லது பலவிதசாஸ்திரத்தினாலாவது அது(பிரமம்) அடையப்படமாட்டாது. எந்த ஆத்மாவானதுஅதை விரும்புகின்றதோ அவ்வாத்மா அதைஅடையக்கூடும், அவ்வாத்மாவுக்கு அவன்(தேவன்) தன்னைத்தானே விளங்கச்செய்கின்றான்" என்றுசொல்லியிருக்கிறது.

இவ்வாக்கியங்களில் ஒவ்வொன்றிலும் அமைந்திருக்கும் விஸ்தாரமான பொருளை எடுத்துரைக்கவேண்டுமானால் வெகு வாய்விரியும். ஒவ்வொன்றும்தனியே பிரசிங்கிக்கப்படலாம், ஆதலின் இப்பொழுது யாம் சர்ச்சிக்கும் விஷயத்துக்குப் பொருந்தியவளவில் மாத்திரமே அவைகளைஇங்குயோசிக்கவேண்டும். இப்பலவாக்கியங்களினாலும் நமது கர்த்தராகியபரமாத்மாவை ஒவ்வொரு சீவனும்நேரேயடையலாமென்பதும், யாரானால் அவனை அறிய சத்தியமாய் விரும்புகின்றனரோ அவர்களுக்கு அவர் தன்னைவிளங்கச்செய்கிறார் என்பதும் பரிஷ்காரமாய்வெளியாகின்றது. மேலும் மூன்றாவதுமுண்டகம், ௧ - வது. அத்தியாயம், ௭-வது. வாக்கியம். "இஃது(பிரமம்)மகத்தானது, திவ்யமானது, நினைவினால் பற்றக்கூடாததன்மையுடையது,நுட்பமானதிலும்நுட்பமானது. (அன்றியும்)பலவாறுபிரகாசிக்கின்றது.(அறியாதவர்களுக்கு)தூரத்திலுந்தூரமானது; (அறிந்தோருக்கு)சமீபத்திலும்சமீபமானது.பார்கிறவர்களுக்குஇக்குஹையில்தானே (இருதயத்தில்) வாசஞ்செய்கின்றது."உலகத்திலுள்ளபலமதங்களும் கடவுளுடையஸ்வரூபசின்னங்களைப்பற்றியும், இவருடைய திருவிளையாட்டுகளையும் பலசரித்திரங்களாலுணர்த்தி,அவரையறிந்துமோக்ஷமடைய விடுகட்டுவதற்காயசாரத்தைப்போல்,பலகட்டுபாடுகளை யுண்டாக்கி, மனதை பலவிதநிர்ப்பந்தங்களுக்குள்ளாக்கி ரங்க ரங்காவென்று சொன்னதை ச்சொல்லும் கிளிப்பிள்ளையைப்போல் போதிக்கப்பட்டதை விசாரமின்றி நம்பி, கிருஸ்துவேயுனைநம்பினேன், மஹம்மதுரசூலில்லா, இராமனுஜாயநமஃ, என்று பலவித மானிடஜபஞ்செய்யப்புகட்ட, வேதாந்தமோவெனில்சகல நிர்ப்பந்தங்களையும் நீக்கி, மோக்ஷப்பிரதனாகிய கடவுளையேபற்றும்படி ஏவுகின்றது. அவனைப்பற்றி நாமறியாததொன்றையும் இதரசாக்ஷியங்கொண்டு நம்பவேண்டியதில்லை. அவன் சத்தியவானும்பரிசுத்தனுமாதலால் அவன் சத்தியமும் பரிசுத்தமும்விரும்பி அவனைநாடினால் அவன்

நேரே அருள்புரிகின்றான் என்றுணர்த்துகிறது. அவனருள் புரிகின்றானென்பதை பிறர்வார்த்தைகொண்டு நம்புவதுமாத்திரமேயன்று. ஒவ்வொரு ஆன்மாவும் அவ்வருளை அனுபவத்தாலறிந்து அவனோடு நேரே உளமகிழ்ந்து உல்லாசமடையலா மென்பதையும் உணர்த்துகின்றது. ௩ - வது முண்டகம் - ௨வது அத்தியாயம்-௮-வது-வாக்கியம். "ஓடுகின்றநதிகள் நாமரூபங்களற்று கடையாககடலில்கலப்பதுபோல் அறிவோர் நாமரூபங்களினின்றுவிடுப்பட்டு மஹத்திலுமஹத்தாய பரமாத்மாவை அடைகின்றனர்." கடோபநிஷத்து-௫-வதுவல்லி(௧௨)வதுவாக்கியம். அவன்ஒருவனே, எல்லாப்பிராணிகளுக்கும் ஆண்டவனும்அந்தராத்மாவாய், ஒன்றாகியதனதுதன்மையைபலவாக்குகின்றான். தங்களில்வாசஞ்செய்வதாய் காண்கிற அறிஞர் சாஸ்விதமானசுகமடைகின்றனர்." ௩-வது-முண்டகம்-௨-வது - பிரிவு ௯-வது- "யார்பிரமனையறிகிறானோ அவன்பிரமனேயாகின்றான்."

இவ்வாறெமது அறிவாலும்பக்தியாலும்அடையக்கூடியமேலானபயன்பரப்பிரமத்திலும் தாழ்ந்ததல்ல. நமதருமையானபிதாநமக்கிஷ்டமுண்டானால் நம்மைதானாக்கிக்கொள்ள சித்தமாயிருக்கின்றான். நாம் நமதப்பனிலும் நமதப்பன்நம்மிலும் கலந்து ஆநந்தத்தில்வாழவேண்டு மென்பதேயவன்திருவுள்ளமா யிருக்கின்றதெனவேதாந்தம் போதிக்கின்றது. இம்மதத்துக்கும் மற்றமதங்களுக்குமுள்ள வித்தியாசத்தைப்பார்க்குமிடத்துஇஃதுஜீவனுள்ளமதமென்றும், மற்றது ஜீவனில்லாதனவென்று முனாக்கலாம். உண்மையாகவே இதரமதங்கள் மதங்களே; என்றால் அபிமதங்களே. இன்னின்னஅபிமதங்களைநம்பி, அவ்வபிமதங்களுக்கேற்றபாஹியசின்னங்களைப்பூண்டு அக்கொள்கைகளின்படிசில பாஹிய ஆசாரங்களை அனுஷ்டிப்பதேஇம்மதங்களின்சிறப்பாகும். வேதாந்தமோவேனில், இதுமதமன்று. இதுகேவலம், அபித்மாய் மாத்திரமேயாகி, பயத்தினாலோ நயத்தினாலோ நாம் நம்பவேண்டிய கொள்கையன்று. ஒவ்வொருவனும்நேரே பயிரிட்டு உண்ணக்கூடியபேராநந்தப்பெரும்பழமாகும்.

காராருவாணவக் காட்டைக்களைந்தறக்
    கண்டகங்காரமென்னுங்,
கல்லைப்பிளந்துநெஞ் சசமானபூமிவெளி
    காணத்திருத்திமேன்மேற்,
பாராதியறியாத மோனமாம்வித்தைப்
    பதித்தன்புநீராகவே,
பாய்ச்சியதுபயிராகு மட்டுமாமாயைவன்
    பறவையணுகாதவண்ண,
நேராகநின்றுவிளை போகம்புசித்துண்ட
    நின்னன்பர்கூட்டமெய்த,
நினைவின்படிக்குநீ முன்னின்றுகாப்பதே
    நின்னருட்பாரமென்று,
மாராருமறியாத சூதானவெளியில்வெளி
    யாகின்றதுரியமயமே, [கி
அண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவா
    யானந்தமானபரமே.

என தாயுமானவர் கூறுவதைக்காண்க. மேலும் இதரமதங்களுக்கும் வேதாந்தத்துக்குமுள்ளபேதத்தைமற்றொருவிதத்திலறியலாம். முற்கூறியவைவேடிக்கையின்பொருட்டு மனுஷியகிருதமான மரத்துக்கொப்பாகும். பின்கூறியதோ ஸ்வபாவமாய் ஜீவனுள்ள இயற்கையான மரத்துக்கொப்பாகும். மனுஷியகிருதமான மரமானது, அதுசெய்யப்பட்டிருக்கும் பொருளின்உசிதத்துக்குத்தக்கபடிபிரகாசிக்கலாம். மார்பில் என்னும் பலவர்ணங்களுடையஸ்படிகத்தினால் அதிகசாதுரியத்தோடும் செய்யப்படுகிற மரமானது பஹுரம்மியமாகவும், யாதொருகுற்றங்குறைவுமின்றி பிரகாசிக்கலாம்; மேலும்நின்றநிலையிலிருந்து இலைமுதலியவைவாடாமலும்சேதமடையாமலும்நசித்துப்போகாமலும் பிரகாசிக்கலாம். ஆயினும்அதற்குஉயிரில்லை. அஃது விநோதார்த்தம்உதவுமேயன்றி, நாம் அருந்தக்கூடியவும் நமதுயிரைக்காக்கக் கூடியவும் யாதொருகனியும் அஃதுகொடுக்கசக்தியற்றதாகும். வச்சிரத்தால்செய்த அரிசிமணிபிரகாசித்துரம்மியமாயினும் உணவுக்குதவாததுபோல், மனதைபிரமிக்கச்செய்தும் ஆத்மஉஜ்ஜீவனமளிக்கமிக்கவன்மையற்றதாகும். வேதாந்தமோவெனில்இயற்கையாயுள்ளமரமாகும். இஃது வித்துக்கும்பூமிக்கும்தக்கபடிவளர்ந்தோ

ங்கி பலதடைவைவாடியும் பலதடவைவளரும். சில்இலைகள்உதிரசிலதுளிர்க்கும், சிலகிளைகள் அறுபட சில நூதனமாய்வளரும், சிலபட்டுப்போகசில இலை காய்கனிகளோடுபிரகாசிக்கும். இம்மரம் இயற்கையானதாகையால், இயற்கையாய்நமது பிணைக்காக்கும்கனியையுதவும். மேலும் இம்மரத்தில்வேர்தொடங்கிபிராணாதாரமானபிராணவாயுக்களும்இரசங்களும்நுனிபரியந்தமோடியாவற்றையும்பிரதிதினமும்புதுப்பித்து அழுக்கைநீக்கி அபிவிர்த்தியடையச் செய்யுமல்லவா? ஆகவேவேதாந்தமானது இப்பிரபஞ்சத்தை யெல்லாம் ஒருமரத்துக்கு ஒப்பிடுகின்றது. கடோபநிஷத்து ௬-வதுவல்லி-௧-வதுவாக்கியம்க "அது. (உலகம்) நித்தியமும் பரிசுத்தமுமான அஸ்வத்த விருக்ஷம்! அதன்மூலம் ஊர்த்தவமுகமாயும், அதன்கிளைகள் அதோமுகமாயும் இருக்கின்றன." எனசெப்புகின்றது. இவ்விருக்ஷத்துக்கு ஊர்த்துவமூலமாகிய கடவுளின்றல்லவோ எப்பொழுதும் பிராணவாயுக்களும் ரசங்களும், எப்பக்கத்திலுமோடி யாவற்றையும் காக்கின்றன. இவ்விருக்ஷத்தின் மூலாதாரமான பிராணன் அந்தஜகதீசனேயல்லவோ. அவனருளாலேயல்லவா அதன்அங்கங்களாகிய சகல பிராணிகளும்உயிர்வாழ்ந்து உஜ்ஜீவிக்கும். இவ்வாறுபரமன்முதல்யாவும்ஓரங்கமாயிருத்தலாலல்லவோ வேதாந்தம், பிரபஞ்சமே கடவுள் கடவுளே பிரபஞ்சமென்றுமீண்டுமீண்டுங்கூறும். இவ்வித சம்பந்த முண்டென்பது சத்தியம். ஆகவேபிரபஞ்சத்தில்ஓரிடத்துண்டாகுங்குறைமுழுதையும் வருந்தச்செய்கின்றது. இஃதெவ்வாராயினும் இச்சம்பந்தத்தையுணர்த்தி, பிரதிகணமும்நமதுமூலமாகியகடவுளினின்று, பிராணாதாரமாகிய,திவ்வியாமுதரசங்களைநமது பிராணன் உண்ணச்செய்து நம்மைக் கடைத்தேறச் செய்வதாயின்வேதாந்தத்தைஜீவமதமென்றுச்சொல்ல யார்தான் பின்வாங்குவார்கள். இது சாத்தியமாவென்பதை மற்றொருநாள் விசாரிப்போம்.

சந்தேகங்கொண்ட நமதன்பராகிய, நாராயணசாமி நாயகரவர்களுக்கு இடசங்கோஜத்தினால் இப்பத்திரிகையில் விடையுரைக்கவில்லை. கூடுமானால் வருகிறமாதங் கூற நினைக்கின்றனம்.

## பிரம்மதருமம்.

### ௪ - வது - அத்தியாயம்.

௧. எதுவானால் செவிக்குச் செவியும், மனதுக்கு மனதும், வாக்குக்கு வாக்குமாயிருக்கின்றதோ, அது (பிரம்மம்)வே பிராணனுக்கும் பிராணனும், கண்ணுக்கு கண்ணுமாயிருக்கிறது.

௨. (ரூபமின்மையால்)அதின் (பிரம்மத்தின்)இடத்தில் கண்ணாவது(நாமமின்மையால்) வாக்காவது (இந்திரியங்களுக்கு கோசரமாகாமையால்)மனதாவது செல்லுகிறதில்லை. அதை (பிரம்மத்தைநாம்) அறியோம். (ஆகையால்)அதை (பிரம்மத்தை)எவ்விதமாய் (சிஷியன்பொருட்டு ஆசாரியர்) தெரிவிப்பார்களோ (அவ்வழியையும்நாம்) அறியோம். அதுவே தெரிந்ததற்கு வேறாயும் 'தெரியாததற்குப் புறம்பாயும் இருக்கின்றதென்று நமக்கு அப்பிரம்மத்தை எவர்களுரைத்தனரோ, அச்சான்றோரானவர்கள் இவ்வாறுரைக்கக்கேட்டோம்.

௩. (கியானமாத்திர ஸ்வரூபமுள்ள) எதுவானால் வாக்கினால் வசனிக்கக்கூடாததும், எதின் (உதவியின்) ஆல் வாக்கு விளங்குகின்றதோ, அதுவே பிரம்மமென்றறி. எதையானால் இது (இந்திரியமனோகிராஹியமான பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

௪. எதுவானால் மனதினால் நினைக்கக்கூடாதவும் (பிரம்மவாதிகள்) எதினால் மனது நினைக்கின்றதென்கிறார்களோ அதையே நீ பிரம்மமென்றறி. எதையானால் இது (இந்திரியமனோகிராஹியமான பிரம்மம்) என்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

௫. ஒருக்கால்நான் அப்பிரம்மத்தின் ரூபத்தை நன்றாய்அறிவேனென்று எண்ணுவாயாகில் அதை நீவெகுகொஞ்சந்தான் அறிவாய்.

௬. அப்பிரம்மத்தின் (ஸ்வரூப)த்தை நம்மில்நன்றாய்நான்அறியேன்என்பவன்அறிவான் அறிவேன் என்பவன்அறியான்,அப்பரபிரம்மம் தெரியுமென்பவர்களுக்த்குதெரியாது.

எ. அதை (முன்சொல்லியபடி அப்பிரம் மத்தை) அறியேன் என்பவர் அறிவார்.

அ. இப்பிறப்பிலே அறிந்துகொண்டால் பிறகுநிலை (யுள்ளநன்மை) யுண்டாகும்; இப் பிறப்பிலே அறியாவிட்டால் அதிகதுன்பம் விளையும். எந்ததீரர்கள் (கியானிகள்) பூதங் கள்தோறும் (ஏகமாகிய அப்பிரம்மத்தை)க் காண்கிறார்களோ, அவர்கள் இவ்வுலகத்தை விட்டு அமிருதராகின்றார்.

முதற்கண்டம் ௨-வது-அத்தியாயம்

முடிந்தது.

## வேளாண்மை.

சுழன்றும் ஏர்பின்னதுலகமதனால்
உழந்தும் உழவேதலை.

உலகத்தில்வாழும் பலபிராணிகளில்மனிதனொருவனே சுபாவமாக முளைக்கின்றபயிர்களைவிட்டு, தனக்கிஷ்டமானபயிர்களைக் கருதிதகுந்த இடங்களைத்தேடி பயிரிடுகின்றனன். பூமியில்எவ்விடத்திலும் பயிர்பூண்டுகள் விஸ்தாரமாய் விளைந்திருந்தும்,இவைகள் மனிதனுணவுக்கு இசைந்தாவதுபோதுமானதாயாவது இரா. ஆகையால் முற்காலத்திலும் இக்காலத்திலும் அநேகதேசங்களில் நாகரீகமற்றமனிதர் காட்டுமிருகங்களை வேட்டையாடி அவைகளின் மாம்சங்களாலும் ஜீவிப்பார்கள். ஆயினும் சிலவிசைபயிர்கள் செழித்தோங்கி யிருக்கின்றகொழுத்தவநங்களிலும்மிருகங்கள் விசேஷமாய் சஞ்சரிக்கிறதில்லை. சகலஉயிர்களுக்கும்தாயாகிய இப்பூமியானது எவ்வளவு செழிப்புள்ளதாயிருந்தபோதிலும், இதினிடத்து சுபாவமாயுண்டாகும் கந்தமூலபலாதிகளாலும் வேட்டையாடி யுண்பதினாலும் மனிதர்குடும்பம் விருத்தி யடையமாட்டாதென்றும் விசேஷ உணவைத்தரத்தக்கபூண்டுக ளின்னவையென்று தெரிந்தெடுத்து பயிர்செய்யப்பட்டாலொழிய மனிதசாதி அபிவிர்த்தியாகி நாகரீகமடைவதில்லைஎன்றும் சகலதேசசரித்திரத்தாலும் ஸ்பஷ்டமாகின்றது.

விவசாயம்மனிதருடையஅபிவிர்த்திக்கும், நாகரீகத்துக்குமேயன்று. அவர்கள் உயிருடன் குடும்பிகளாகவாழ்ந்திருப்பதற்கே அவசியமாகஇருந்தபடியால்தான்இந்தசிறந்ததொழில் மற்றெல்லாதொழில்களுக்கும் சாஸ்திரங்களுக்குமுன்பு மனிதர்விசேஷ அறிவின்றிமூடராயிருந்தபோதேஅவர்களால்கண்டுபிடித்து அப்பியசிக்கப்பட்டது. இது சிருஷ்டிகாலத்தில்தானே கடவுளால் மனிதனுக்கு காட்டப்பட்டதென்று சிலர் சொல்லுகிறார்கள். இது எப்படியிருந்தபோதிலும்வியவசாயத்தை மனிதர் வெகுகாலத்துக்குமுன்பாகவே அறிந்து அப்பியசித்து வந்தார்கள், என்பதற்குஎவ்வளவும் சந்தேகமில்லை. இதுதொன்று தொட்டுவழங்கிவரும்தொழிலா யிருந்தும் மனிதரிதனிடத்து தங்களுக்குள்ள விசேஷஞானத்தையும் யுக்தியையும் செலுத்தி அபிவிர்த்திசெய்ய கொஞ்சகாலத்துக்கு முன்வரையில்தகுந்தமுயற்சிகளைச்செய்யாமலிருந்தார்கள். ஔதாரியத்திற்சிறந்தஇந்தபூமியானதுயாசகர்முகஞ்சோர்ந்து கேட்பதற்குமுன்பாகவே ஆதரிக்கும் தாதாக்களைப்போல அற்ப பிரயாசப்படும், மனிதருக்குவேண்டியவுணவை அளித்துவந்தமையால் மனிதர் அதிகமாயுழைக்க மனமின்றி தங்களுக்கு ஆவசியகமாயிருந்த, மற்றவிஷயங்களைத் தேடவும் மற்றதொழில்களில் பிரவேசிக்கவும் தலைப்பட்டார்கள். மேலும் பயிர்பூண்டுகளைச் செழித்தோங்கச் செய்ய பெரும்பாலும் பூமிக்குள்ளடங்கியிருப்பனவாயும் தோற்றத்துக்கு எளிதில் புலப்படாதனவாயும், பிரபஞ்சத்துக்கு மூலகாரணமாகிய ஆதிபூதங்களின் சத்துசொரூபவிகாராதிகளைச் சார்ந்தனவாயிருந்தமையால்மனிதர் இந்த உபயோகமான தொழிலை அபிவிர்த்திசெய்வது நெடுநாள் கூடாமையாயிருந்தது. ஆயினும் இக்காலத்தில் சகலசாஸ்திரங்களும் சாங்கோபாங்கமாக அறிவுள்ளமனிதரால் கற்கப்பட்டு அற்புதமாக விருத்திசெய்யப்பட்டு வருகிறபடியால், ஆதிபூதங்களின் குணாகுணங்களையும் சம்பந்தா சம்பந்தங்களையும் நுட்பமாய்கண்டறிந்த இரசவாதிகள் மனிதருக்கு அவசியமாகிய இந்தபுராதனதொழிலை, விர்த்திசெய்ய முயன்று சிலவருஷங்களுக்குள்ளாக அநேக ஆச்சரியமான உண்மைகளைவெளியிட்டு வியவசாயம்மற்ற தொழில்களைப் போலும் இன்னும் விசேஷமாகவும் மனிதருக்கு பயன்படச்செய்தார்கள்.

வியவசாயத்தொழிலுக்குரிய மேற்கண்ட உண்மைகளை இங்கு எடுத்து மொழியுமுன்பாக பொதுவாய் சிலவசனங் கூறுவோம். தொன்றுதொட்டு வழங்கிவரும் வெகுதந்திரமற்ற எந்திரமாகிய கலப்பையன்றி வேறுசாதனங்களை நம்மவர் அநேகர்கண்டிராதபடியால் வேளாண்மையை அபிவிர்த்திசெய்யக்கூடுமென்று நம்பசந்தேகப்படலாம். ஆயினும் இது சரியலலவென்றுமேற்படி கலப்பையினாலேயே அறிந்துகொள்ளலாம். இந்த சிறுஉபாயமற்ற கருவியில்லாமல் நாம் இப்போது அனுபவித்துவரும் அநேகரு

சிகரமான புலவிதபதார்த்தங்களும் நமக்கு
க்கிடைக்க மாட்டாவல்லவா? இப்போதுநா
ம்செய்துவருகிற இச்சிறு முயற்ச்சியினுலே
யே இவ்வளவுபிரயோசனத்தை அடைவோ
மாகில் இன்னும் சற்றேமுயன்ருல் விசேஷ
லாபம்பெற்று லோகோபகாரிகளாகலாமெ
ன்பதற்குசந்தோகமோ ? மேலும்இக்காலத்
தில் ஐரோப்பா தேசங்களிலிருந்துவரும்த
னவான்கள், நமது கண்முன்பாகவே சேர்
வராயன்மலே, நீலகிரிமலே, முதலியமலேப்பி
ரதேசங்களிலும் மற்ற உள்நாடுகளிலும்கா
ப்பிக்கொட்டை பருத்திமுதலியவற்றைபயி
ர்செய்து இலக்ஷம் இலக்ஷமாய்லாபத்தை
யடைவது நாம் பார்க்கிருேமல்லவா? உல
கத்திலுள்ள அநேகநாடுகளேப்பார்க்கிலும்ந
மதுதேசம் விசேஷம்செழுமையும்,கொழு
ப்பும், மற்று மநேகசத்குணங்களுண்டாயி
ருந்தும் நம்மிடத்துசாஸ்திரகியானமும்பெ
ருமுயற்சியுமில்லாதபடியால் நாம் வர்த்தக
த்திலுஞ் செல்வத்திலும் அன்னியதேசத்தா
ருக்கு நாளுக்குநாள் பின்னிட்டுபோனேம்.
ஆதலால் வேளாண்மைக்குரிய சிலவிஷயங்
களே, லகுவாயிவ்விடத்தில்எடுத்துக் காட்டு
வோம்.

நாம்வாசம்பண்ணுகிற இந்தபூமியில்விசே
ஷசெழுமையும் கொழுப்பும் பயிர்பூண்டு
களே விர்த்தியடையச் செய்யத்தக்ககாரண
பூதங்கள்யாவும் சுபாவமாகவே கூடியிருக்
கின்றன வென்பதற்கு அங்கங்கேவனங்களி
லும்மலேகளிலும்மனிதபிரயத்தினமின்றியே
அளவின்றி வளர்ந்தோங்கும் புல் பூண்டு
கொடிகாய்கள் செடி மரங்கள்முதலியவே
சாக்ஷியாகும். ஆதலால் மனிதபிரயத்தின
த்தால் ஆகவேண்டியகாரியம் பெரும்பாலு
ம் பூமியைக்கொழுப்பிக்கச் செய்வதன்று,
மற்று நமக்கு ஆகாதனவற்றை யொழித்து
பூமியிலிருக்குஞ் சத்துசாரமெல்லாம் வீணு
காமல்நமக்கானவஸ்துக்களே யுண்டாக்கபய
ன்படச்செய்வதே. இந்த உண்மையை நாம்
மெத்தகவனிக்க வேண்டுமென்பது பின்னுல்
விளங்கும். பூமியினுடையசகலசுபாவஸ்திதி
யிலும்அந்தந்தமண்ணுக்கும்அம்மண்ணேச்சூ
ழ்ந்தவாயு வுஷ்ட்ணநிலேக்குந் தக்ககந்தமூ
லாதிகள் விளேந்திருப்பதைநாம்பிரத்தியக்ஷ
மாய்க்காண்கிருேம். சீதோஷ்ட்ணம்சமமா
யிருக்கும் (மிதவாயுநிலேயுடைய) சிலாநடு
களில் காட்டுதானியங்கள் கொஞ்சந் தாமா
ய்வளரும். ஆதியில்சற்று நாகரீக மடைந்த
சனங்கள் புல்லரிசி மூங்கிலரிசிமுதலியவ
ற்ருல் ஜீவித்திருந்ததாக கேட்டிருக்குருே
ம். இக்காலத்திலும் க்ஷாமதசைகளில்காட்
டுதானியங்களே உபையோகப்படுத்துவார்க
ள். ஆயினும் இந்தக்காட்டுதானியங்கள் மிக
வும் அருமையே யன்றி விசேஷமாய் எங்
கும் விளேகிறதில்லே. ஆதலால்நமக்குஅவசி
யமாகிய இனியபதார்த்தங்களே யடையநா
ம்பூமியில் சுபாவமாகத் தோன்றுகிற பயிர்
களேக்களேந்து சீர்திருத்தினாலொழிய சாய
மாட்டாது. காடுமுள்ளுமாயிருக்கிற வனு
ந்தரங்களேவிட்டு சமமாக ஒன்றும் விளேயா
த வெளியாயிருக்கிற இடங்களேப் பயிர்
செய்யலாகாதோவெனில் இந்தநிலத்தைப்
பயிர்செய்வதால் யாதொரு பிரயோசனத்
தையும் அடையோம். இப்படிப்பட்ட வெ
ளிகள்ஒன்றும்விளேயாது சுத்த சூன்னியமா
யிருப்பதே இதில்பயிர்களே ஊட்டிவளர்க்கு
ங் காரணபூதங்க ளில்லேயென்பதற்குப்போ
துமானசாக்ஷியம். முட்செடிகளும் பொதரு
களும் பெருங்கூட்டமாக வளர்ந்தோங்கும்
புலமே சீர்ப்படுத்தப் படுமாயின் அவ்வளவு
ம் இனிமையான காய்கரி பதார்த்தங்களா
ய்த் தோன்ருவோ. அளவற்ற வனுந்திரங்க
ளேயும் முட்பொதருகளேயும் மற்றுமுள்ளசக
லவிதகாட்டுக்கந்தமூலபலாதிகளேக் கொத்தி
க்களேபிடுங்கிஜலம்விட்டுவளர்த்தவர்கள்உண்
டோ? உழுதல்எருப்போடல் நீர்ப்பாய்ச்சல்
முதலியதொழில்களில்லாமலேபூமியின் சா
ரமானது அடர்ந்த அளவற்றவனங்களாய்ப்
பெருகி பரவியிருக்கவில்லேயோ. ஆதலால்எ
ருமுதலியவற்ருல் ஆசாரமான பூமியிடத்து
சாரமுண்டாக்கசிலபோதுமுயன்ருலும்வே
ளாளன் செய்யவேண்டியமுக்கியமான கா
ரியம்பூமிக்குசெழுமையுண்டாக்கவல்ல;மற்
று பூமியினிடத்து சுபாவமாயிரானின்ற சத்
துகள் இன்னவையென்றறிந்து அவைகளே த
ன்கருத்துக்கிசைந்த நற்பயிர்களே விளேவிக்க
சேர்படத் திருத்திக்கொள்வதேஎன்பதும்விசி
தமாகும். பாழாய் சுத்தசூனியமாய் ஒன்று
ம் விளேயாதிருக்கும் பாலேநிலத்தில் எவ்வள
வுஎருக்கொட்டினுலும். வேளாண்மைக்குத
வுமென்று யாராவதுநம்புவார்களோ ? ஆத
லால் வேளாண்மைக்குரிய முக்கியதொழில்
களேயும் சாதன கருவிகளேயும் கூறுவதற்கு
முன்பாக பூமியினிடத்திலிருக்கும் சாரபூத
ங்களின்னன்னவை என்பதும், கந்தமூலாதி
கள் இன்னின்ன பூதங்களின்கலப்பால்இன்
னன்னவிதமாய் உண்டாகின்றன வென்பது
ம் ஆகிய இந்தமுக்கிய அம்சங்களேசாஸ்திர
க்கிரமமாகவும்,சுருக்கமாகவும்விசாரிப்போ
ம். இந்தவிஷயங்களேச் சொல்லும் சாஸ்தி
ரத்திற்குவியவசாய ரசவாதமென்றுபெயர்.

## மாதருவாச்சல்லியம்.

பிள்ளேயின் பெருமை பெற்றவ ளறிவா

ள். வள்ளலெனப்படும்வலியோன்தன்னிலு
ம், அன்னைதன்சிறப்புஅனைவரும் போற்று
வர்.

௧எஅ௧௫ஆ. செப்டெம்பர் மாதம், (இங்
லாண்டிலுள்ள) சாலிஸ் பெரிநகரம் செண்
டாமஸ் கோயிலண்டையில், பிரிமாண்டி
லென்னு மொருமனிதனுடையகுமாரனாகிய
ஐந்துவயதுள்ளசிறுவன்அந்நகரத்துமில்லஎந்
திரத்தின் அணைச்சமீபம் விளையாடிக்கொ
ண்டிருக்கையில் ஜலத்தில் விழுந்துவிட்டா
ன். அச்சிறுவனுடையசகோதரியான ஒன்ப
துவயதுள்ளவள், தன்னிலும் மூத்தோருக்
கும் தகைபடுபாசத்தால் ஏவப்பட்டுதன்ச
கோதரனைகாக்கும்பொருட்டு சலத்தில்குதி
த்தனள். அன்றியும் அவ்விருவரும் தாயின்
கண் முன்பாகவே ஜலத்தில் மூழ்கிக் கொ
ண்டிருந்தனர். அவ்வெளியதாயானவள் த
ன்குழந்தைகளுக்கு நேரிட்ட அபாயத்தை
க்கண்டு திடுக்குற்று நடுநடுங்கி உடனேஅ
வர்களைக்காக்கும் பொருட்டு தானும் சலத்
தில் குதித்து இரண்டு கைகளிலும் இரண்
டுபிள்ளைகளையும் ஏந்திக்கொண்டுமேலே எ
ழும்பிஓ வென்று கூச்சலிட்டாள். இவள்கூ
ச்சலைக் கேட்ட இவள்புருஷன் உடனே ஓ
டிவந்து இம்மூவரையுங்காப்பாற்றினன்.

தன்மகன்பொருட்டாய்
தாய்படும் பெருந்துயர்,
அன்பொடு வளர்த்ததாய்
அன்றிவேறறிவதார்.

சிலவருடங்களுக்கு முன்பாகவைட்சாப
ல்என்னுமிடத்தில் ஒருவீதி முழுமையும்பத்
திக்கொண்டது. அத்தீயானது வெகுதீவர
மாய் இருந்தமையால்அவ்வீடுகளில்வாசஞ்
செய்த ஏழை ஜனங்களைக்காப்பது மெத்த
அருமையாயிருந்தது. பெரியகுடும்பமுடை
யஒருபேதமையுள்ளமாதானவள், அந்நெரு
ப்புக்குத்தப்பி, தன்பிள்ளைகளை யெல்லாம்
சூழ விருத்திஅவர்களைக்காத்ததற்காக கட
வுளை வந்தனஞ்செய்ய வணங்கினள். அப்
பொழுது தன்கைக்குழந்தையைக் காணும
ல் திடுக்குற்றனள். உடனே தாயின்பாசத்
தால் மாத்திரமே உண்டாகக் கூடியதைரி
யத்தோடு, மேலுக்கு துணியில்லாமலேப
குதிஅம்மணமாயிருந்தது போலவேயோடி
எறிந்துகொண்டிருந்தபடி ஏறி தொட்டிலி
லிருந்த குழந்தையைவாரி அணைத்துக்கொ
ண்டு, களையிலா உவகையோடும் கேக்கை
போட்டுக்கொண்டு வெளியிலோடிவந்தன
ள். அன்றியுமய்யோ அவள்சந்தோஷம்க்ஷ
ணமாத்திரையதாயிற்று. அக்குழந்தை த
ன்குழந்தையா யிருக்கவில்லை. வீடுகளைச்சூ
ழ்ந்தபுகையினால் மோசம்போய், வேறேவீ
ட்டுக்குள் புகுந்துஅயலாள்பிள்ளையைக்கா
ப்பாற்றினள். மீண்டும் விரைவாகவோடிவ
ந்தனள். அன்றியும் அதற்குள்ளாக வீடெல்
லாம்விழுந்துவிட்டது. இதைக்கண்டதாயா
னவள்மூர்ச்சையோடுதரையில்விழுந்து, சி
லநாழிகைக்குள்ளாக இறந்துபோனாள்.

---

## அமிர்தவசனி.

## இராக்ஷதர்

முற்காலத்தில் அநேக தலைகளையும், அ
நேககைகளையும் உடைய இராக்ஷதர் இப்பூ
லோகத்தில் வசித்திருந்ததாய்ச் சிலபுராணி
கர் எழுதியிருக்கிறார்கள். இந்த இராக்ஷதர்
மிகவும் பலபராக்கிரமசாலிகளாய்த் தேவ
லோகத்துக் குடிகளையும் துன்பப்படுத்தின
ர்களென்று வாசிக்கிறோம். இராமருடையப
த்தினியாகிய சீதையைப் பலவந்தமாய் இ
லங்காபுரிக்குக்கொண்டுபோய் இராம இல
க்ஷமணருக்கு மிகுந்த சங்கடங்களை விளை
வித்த இராவணாசுரனைப்பற்றிய கதைகளை நீ
ங்கள் வாசித்திருக்கலாம். இந்த அகோர
காரியங்களைச்செய்த பத்துத்தலை இராவண
ன்முதலிய இராக்ஷதர்களிருந்தார்களென்ப
தை அநேகர் சந்தேகிப்பார்கள். மேலும் த
ற்காலத்தில் இப்பேர்பட்டவர்களை நாம் கா
ண்பதுமில்லை. ஆகிலும் இந்தக் கொடிய அ
சுரர்களைப் பார்க்கிலும் மிகுந்த பராக்கிரம
த்தையுடைய சில இராக்ஷதர்கள் இவ்வுலக
த்தில் இருப்பது மெய்யே. இவர்களைப்பற்றி
உங்களுக்குச் சிறிது சொல்ல விரும்புகிறே
ன். பயப்படவேண்டாம், இவர்கள் உங்களை
ப் பிடித்துக் கொள்ளார்கள். இவர்களுடை
ய குணாதிசயங்களை ஆராய்ந்து இவர்களைப்
பக்குவமாய்க்கையாடுவீர்களேயாகில் உங்க
ளுக்கு எண்ணிறந்த நன்மைகள் உண்டாவ
துமன்றி, நம்முடைய தேசத்திற்கும் நலம்
உண்டாகும்.

இரண்டொரு மாதங்களுக்கு முன் வடக்
கே பங்காளத்திலும், மச்சிலிபந்தரிலும் தெ
ற்கே கூடலூரிலும் அநேகமெத்தை மேடை
கள் இடிந்து விழுந்ததாகவும், தோப்புதோ
ட்டங்கள்பாழானதாகவும், பயிர்பச்சைகள்
அழிந்ததாகவும், ஆடுமாடுகள் மந்தைமந்தை
யாய் மடிந்ததாகவும், அநேகமாயிரம் புரு
ஷரும் ஸ்திரீகளும் குழந்தைகளும்துயர்உற்
று, பிராணசேதமடைந்ததாகவும், அநேக
வர்தகக் கப்பல்கள் உடைந்து முழிகிப்போ
னதாயும் கேள்விபட்டு நடுக்கமுற்றிருந்தோ
மல்லவா? இந்த அகோர நஷ்டங்களையெல்

யும்விளைவித்தவன் இன்னானென்று தெரிமா! காற்றென்னப்பட்ட இராக்ஷதன் அவனா. இராக்ஷதவுருவம் இவனுக்கில்லாவிட்டாலும் பல பராக்கிரமத்தில் வாயுவுக்கு நிகரானசிருஷ்டி வேறொன்றில்லை. இவனுக்குண்டாயிருக்கிற வலிமையைப்பற்றியே இவனுக்கு இராக்ஷதனென்று பெயரிட்டேன். இவனால் மேற்சொன்ன நஷ்டங்கள்தானே உண்டாகும்; நமக்கும் நம்முடையதேசத்திற்கும் எண்ணிறந்தநன்மைகள்உண்டாவதெப்படியென்று கேட்பீர்களோ, சொல்லுகிறேன். கடவுள் நம்முடைய உயிருக்குப் படைத்திருக்கிற முக்கியமான ஆதாரவுகளில் காற்று நமக்கு இன்றி அமையாத பொருள். ஜலம் வெளிச்சமுமில்லாமலிருந்தும்,காற்றிருந்தால் நாம் சிலநாள் பிழைத்திருக்ககூடும். காற்றில்லாமல் ஜலமும் ஒளியுமுண்டாயிருக்குமானால் சில நிமிஷங்களும் பிழைத்திருப்பது அசாத்தியம். உஷ்ண காலத்தில் காற்று வீசியடிக்காமல் அசைவற்றிருக்கிறதுபோல் தோன்றுமானால் நாம் எப்படித் தவிக்கிறோம் தெரியாதா? எங்குபார்த்தாலும் வெந்துபோகிறது வெந்துபோகிறது என்கிற கூச்சலும், விசிறிக்குக் கிராக்கியும், கிணற்றுத் தண்ணீர்க்குச் செலவுதான் காண்கிறோம். காற்று கொஞ்மாயடிக்கும்போதே இவ்வளவு ஶ்ரமை உண்டாகுதல்லவா?

கல்கத்தாவில் அங்கிலேயதுரைகள் முதல் முதல் குடியேறினபொழுது அங்கே சொடுங்கோல் செலுத்திக்கொண்டிருந்த சுராஜாடௌலா என்பவன் அவர்களைப் பிடித்து நெருக்கமான ஒரு இருண்டஅறையில் அடைத்து விட்டுப்போய்,அர்கவள் காற்றில்லாமல் தவித்து மறுநாள் உதயத்திற்குள்ளாக மடிந்துபோனார்களென்கிற கதையைக் கேட்டிருப்பீர்கள். இவ்விரண்டொரு உதாரணங்களால் காற்று நமக்கு இன்றியமையாதபொருள் என்று விளங்கும்.

நாம்அனைவரும்நமக்குண்டாயிருக்கிறவேலைகளையெல்லாம் ஏவலாட்களைக்கொண்டுநிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறது வழக்கமல்லவா? ஆகிலும் கூலிவாங்காமல் வேலைசெய்கிறவர்களில்லை. சம்பளங் கொடுத்து வேலைக்காரரைவைக்க நம்மில் அநேகருக்கு நிர்வாகமுமில்லை. நம்முடைய வண்டி ஏர்முதலியவைகளை இழுக்கிற மாடுகள் நமக்கு மிகவும் உதவியானவைகள்தான். ஆனால் அவைகளைக் கொள்ள பணம் வேண்டியிருக்கிறது. பணங்கொடுத்து வாங்கினாலும் அவைகளுக்குத் தீனி முதலியவைகளைப் புஷ்டியாகப்போடவேண்டி யிருக்கிறது. அப்படிப் போட்டாலும் அவைகொஞ்சநாளைக்குள் செத்துப்போகின்றன. யானைகள் கனமான பாரங்களையெல்லாம் சுமந்துகொண்டுபோக சக்தியுடையவைதான். ஆனால் அவைகளுக்கு விசேஷ திண்டிபோடவேண்டியதாயிருக்கிறது. சம்பளங் கேட்காமலும், புசிக்கப்போசனத்தைத் தேடாமலும் உழைக்க சலிக்காமலுமிருந்து நூறுயானைகள் செய்யக்கூடிய வேலையைப்பார்க்கிலும் அதிக வேலைசெய்து முடிக்கச் சக்தியுடைய ஏவலாளிகளும் இந்த லோகத்திலிருக்கிறார்கள். அவர்களில் வாயுஎன்னும் இராக்ஷதனொருவனும். இந்நகரத்திற்குத் தெற்கே இருக்கிற திருப்போரூருக்கும், வடக்கேயிருக்கிற பழவேர்க்காட்டுக்கும் படவுமேல் ஏறிப்போயிருப்பீர்கள். காற்றில்லாவிட்டால் படவுக்காரர் வடங்களைப்போட்டு வலித்துகொண்டு போகிறதைப் பார்பீர்கள். அப்படி இருவர் வலித்துக்கொண்டுபோனாலும் மேற்சொல்லிய இடங்களுக்குப் போய்ச்சேர இரண்டுநாள் பிடிக்கிறது. காற்று அடிக்கையில் அதனைத்தங்களுக்கு அனுகூலமாகத் திருப்பிகொள்ளத்தக்க சாமார்த்தியமுள்ளவர்களாய்ப் படவுக்காரர்கள் இருப்பார்களேயானால் நாலைந்துமணிநேத்திற்குள்ளாகவேமேற்படி இடங்களுக்குப்போயிருக்கிறோம். காற்று என்ன வேலை செய்கிறது பாத்தீர்களா? சென்னைசமுத்திரக் கரையோரத்திலிருக்கிற இருப்புப் பாலத்தின்மேல் நின்று சமீபத்திலிருக்கிற பிரமாண்டமான கப்பல்களைப் பார்திருபீர்கள். அக்கப்பல்களிலொன்றை மெதுவாய் இழுக்கவேண்டுமானாலும் ஒரு யானையினால்ஆகிறது கஷ்டந்தான். மூன்று யானைகள்சேர்ந்து வலித்தாலும் இக்கப்பல்களிலொன்று சீக்கிரமாய் நகருகிறது வருத்தந்தான். காற்றாகிய இராக்ஷதன் அநேக பாரமான கப்பல்களை ஆயிரமாயிர மயில்கள் தூரம் தள்ளிக்கொண்டுபோகிறான். இவனுடைய பலத்தையும் வேகத்தையும் பார்த்த முன்னோர்கள் ஒரு பழமொழியாலும் புகழ்ந்திருக்கிறார்கள். அந்தபழமொழியைக் கேட்டிருக்கிறீர்களா? ஒரு குதிரையானாலும் மாடானாலும் மெத்த வேகமாய் ஓடுமானால் வாயுவேகம் மனோவேகமாயோடுகின்றது என்று சொல்லுகிறது வழக்கமல்லவா? இதினால் மனோவேகத்திற்கு ஒருவாறு சமமாயிருப்பது வாயுவேகமென்றறிகிறோம். காற்றானது இப்படிப் பாரமான கப்பல்களையும் படவுகளையும் தள்ளிக்கொண்டுபோகிறதுமன்றி, யூரோப்புமுதலிய இடங்களில் இன்னும் அநேக பிரயோசனமான வேலைகளைச் செய்துவருகிறான். சிலஇடங்களில் கோதுமை முதலியதா

னியங்களைமாவரைக்கிறான், தண்ணீர் இறைக்கிறான். இத்தேசத்துச் சனங்களும் யுக்தியுள்ளவர்களாய் இருப்பார்களேயானால் இவ்விடத்திலும் இத்தன்மையானபலவேலைகளை இவன்செய்வான். இந்நகரத்துக் கோட்டைக்கு வடகிழக்கில் இவன் ஓயாமல் வேலைசெய்து வருகிறானே பார்த்தீர்களா? கோட்டையிலுள்ள ஜலதாரைகளில் ஓடுகிற தண்ணீரையெல்லாம் சமுத்திரத்திற்கு இரவும் பகலும் இறைத்துக்கொண்டிருக்கிறான்.

ஆனால்காற்றாகிய இந்தஇராக்ஷதன் மாறுபாடுள்ளவன். இவன் தனக்கிச்சையான வழியே செல்லுவான். பக்குவமறிந்தவர்கள் இவன் எப்பக்கத்தில் அடித்தாலும் தகுந்த தந்திரஞ்செய்து தாங்கள் எடுத்த வேலைக்கு இவனை அநுகூலமாக்கிக்கொள்வார்கள்.

## மூன்று இராக்ஷதர்.

இதுவரையில் காற்றாகியஇராக்ஷதனைக்குறித்துச் சிலவற்றை எழுதியிருந்தோம். இப்பொழுது அவன் தோழர்களில்ஒருவனாகியஜலத்தைப்பற்றிச் சிறிது சொல்லுவோம். காற்றைப்போல ஜலம் நிலையற்றனவல்ல. இவன் நிலையாயிருந்து வேலைசெய்வான், நம்முடையதேசத்தில் இவனைப்பக்குவப்படுத்திக்கையாடுவதில்லை. நதியோரங்களிலிருக்கிற மலை காடுகளில் பெரிய மரங்களை வெட்டிச் சாய்த்து ஆற்று நீரோட்டத்தில் தள்ளுவதுண்டு. அவை நீரோட்டத்தில் மிதந்துகொண்டே சமுத்திரக் கரையோரங்களிலுள்ள பட்டணங்களுக்கு எளிதிற்போய்ச் சேரும். காவேரி நதியில் பத்தடிசுற்றளவுடைய கூடைகளைப்பின்னி மிருகத்தோல்களைச் சுற்றி ஒட்டவைத்து, காவேரியாற்றில் மிதக்கவிடுகிறார்கள்; அவைபடகுபோல்இருக்கின்றன. அவைகளில்அரிசிமூட்டை, சர்க்கரைமூட்டை முதலியவற்றை ஏற்றுமதிசெய்து வர்த்தகர்கள் கொண்டுபோகிறார்கள். நீராழமுள்ளகங்கைமுதலிய மகாநதிகளில் பெரிய தோணிகளையும் படவுகளையும் விட்டுக் கொண்டுபோகிறார்கள். யூரோப்புகண்டத்திலும் அமெரிக்காகண்டத்திலும் தானியங்களை மாவரைக்கவும் பெருத்தமரங்களை வாளால்அறுக்கவும், இன்னம்அநேகவேலைகளைச் செய்துமுடிக்கவும் ஜலத்தைப் பக்குவப்படுத்திக் கையாடுகிறார்கள். ஒரு பெரிய சக்கரத்தைச்சுற்றிப் பலகைகள்புறப்பட்டிருக்கச்செய்து, பாதிநீரோட்டத்தில் அமிழ்ந்திருக்கும்படிநிறுத்தினால் நீரோட்டத்தின்வேகம் அந்தச் சக்கரம் சுழலும்படிசெய்யும். இவ்வாறு இசைக்கப்பட்ட ஓர்பெரியசக்கரம் வேகமாய்ஓடுகிற ஒருநீரோட்டத்தில் இருபதுகுதிரைகளின் வேகத்தையுடையதாய்ச்சுழலும். இப்படிச்சுழல்கின்ற சக்கரங்களைக்கொண்டு இயந்திரங்கள் சுழலவும், தானியமுதலியவைமாவரைக்கவும்செய்கிறார்கள். கங்காநதியோரத்தில் இப்பேர்ப்பட்ட பல இயந்திரங்களை இயற்றி வேலைசெய்து வருகிறார்கள். இருவர் ஒரு பெரிய மாதிரியிலிருந்து ஒரு பெரிய பலகையை அறுக்க வேண்டுமானால் மெத்த நேரஞ்செல்லும். மேற்சொன்ன ஜலஇயந்திரம் ஒன்று ஏககாலத்தில் பத்து வாள்களைக்கொண்டு அறுத்து ஓர் பெரிய மாதிரியை ஒரு மணிநேரத்திற்குள் பலகைகளாக அறுத்துத்தள்ளும். பயிர் பச்சைகளுக்குத் தண்ணீர் இறைக்கவும் இந்த ஜல இயந்திரங்களால் ஆகும்.

மூன்றாவது இராக்ஷதனைக்குறித் தெழுதுகிறோம். காற்றாகியஇராக்ஷதன் ஸ்திரமற்றவனென்று சொன்னோமல்லவா? இருந்தாற்போலிருந்து நல்லசமயத்தில் மோசஞ்செய்வான். ஜலமாகிய இராக்ஷதன் நிலைதப்பாதவனாயிருந்தும் சிலஇடங்களில் மாத்திரம் உதவிசெய்வானேதவிர, நாம் நினைத்த இடங்களிலெல்லாம் வர ஒத்துக்கொள்ளமாட்டான். ஆனால் காற்றும் ஜலமுமாகிய இவ்விரண்டு இராக்ஷதர்கள் ஆகாரம்வேண்டுகிறதில்லை; கூலியுங்கேட்கிறதில்லை. ஜலமாகியஇராக்ஷதனுக்கு ஒருபுத்திரனுண்டு. அவனுக்கு இராக்ஷதனாகிய நீராவியென்றுபெயர். இவன் எல்லா இடங்களிலும் எல்லாசமயங்களிலும் சலிக்காமல்வேலைசெய்வான். இவன்இளைப்படைகிறதுமில்லை, உறங்குகிறதுமில்லை, நித்திரைக்கும் அவனுக்கும மெத்ததூரம். ஆனால் எவ்வளவுநேரம் வேலைசெய்வானோ அவ்வளவுநேரம் அவனுக்கு ஆகாரம்வேண்டும். வேலைசெய்யாதநேரத்தில் இவனும்ஆகாரத்தைவேண்டான். நீராவியாகிய இந்த இராக்ஷதபுத்திரனுக்கு எரிகரும்பும், சுட்டகரியும், ஜலமுமே ஆகாரமாம். ஒரு பலத்த இருப்புச்சாலில் ஜலத்தை யூற்றிக் கொதிக்கவைத்தால் நீராவியாகியஇராக்ஷதபுத்திரன் தப்பித்துக்கொண்டோடப் பிரயத்தனப்படுவான். அந்தச்சமயத்தில் அவனைப்பக்குவப்படுத்திக்கையாடினால் என்னவேலையானாலும் ஒழுங்காய்ச்செய்வான். நூல்நூற்றுத்துணிநெய்யவும், இரும்புமுதலிய உலோகங்களை உலைக்களத்தில் காய்ச்சியடிக்கவும், மாவரைக்கவும், தண்ணீர்இறைக்கவும், புத்தகங்களை அச்சிற்பதிக்கவும் இவனாலாகும். மேலும் கரைவழியாவது தண்ணீர்மேலாவது எவ்வளவுபளுவை வலித்துக்கொண்டு போகச்சொன்னாலும்வலித்துக்கொண்டுபோவான். சென்னை இருப்புப்பாதையில் ஓடுகிற பி

நமாண்ட வண்டிகளைப்போன்ற நூறு வண்டிகள்நிறைய பளுவேற்றினால் வாயுவேக மனோவேகமாய் அவைகளை வலித்துக்கொண்டோடுவான். இதைவிட இருபதுமடங்கதிகமான பளுவை ஓர் பெரியசப்பலில் ஏற்றுமதிசெய்தால் அந்தப் பளுவையும் பரவாசெய்யாமல் சப்பலை வலித்துக்கொண்டு இராக்ஷத ஸ்வரூபியாகிய காற்று நேர்முகமாய் மோதியடித்தாலும், அவனையும்லக்ஷியஞ்செய்யாமல் நாம் போகச்சொல்லுகிற இடத்திற்குக் கப்பலை விரைவாய்த்தள்ளிக்கொண்டு போவான். மகா சமுத்திரங்களையெல்லாம் ஓய்வுசாய்வின்றி கடக்க இவனாலாகும். ஆயிரங்குதிரைகளினுடையவும், அநேக மதயானைகளினுடையவும் பலத்தைப் பார்க்கிலும் விசேஷ பலபராக்கிரமத்தையுடையவனாய் இவன் இருந்தாலும் குணத்தில்நல்லவன்: அடக்கமுண்டு: ஒரு சிறுகுழந்தையும் இவனைக் கைவசப்படுத்திக்கொண்டு நடத்தலாம். நாள்தோறும் இங்கிலண்ட்தேசத்தில் இவன் செய்துமுடிக்கிறவேலை இவ்வளவென்றுசொல்லி நிதானிப்பது வருத்தமாம். இப்பூமியிலுள்ளபுருஷர்களெல்லாரும் ஏககாலத்தில திரண்டுருண்டுபோய் உழைத்தாலும் அவன் வேலைக்குச் சரியாகச்செய்து முடிக்கமாட்டார்களாம். இந்த உத்தமனை நம்முடைய தேசத்திலும் கைவேலைக்கு வைத்துக்கொண்டால் நாம் எவ்வளவு சுகத்தையடையலாம். இரண்டுநாள் மூன்றுநாள் கஷ்ட பிரயாணஞ்செய்து நாம் போய்க்கொண்டிருந்த திருவள்ளூர், காஞ்சிபுரம் முதலிய ஸ்தலங்களுக்கு அதிக பணவிரயமின்றி இரண்டொரு நாழிகைக்குள் நம்மை ஏற்றிக்கொண்டு போய்விடுகிறான். இவன் மஹத்தை என்னவென்று சொல்லலாம்! தருணம் வாய்க்கும்போது இவனைப்பற்றி இன்னுஞ் சிலவிசேஷங்களைச் சொல்லுவோம்.

## சுத்தம்.

நாம்குடியிருக்கிற வீடுகள்தோறும் ஜலதாரைகள் ஏற்பட்டிருக்கிறதை அறிவோம். இவைகளைச்சாக்கடையென்றும், சாலகமென்றும் சொல்லுவார்கள். வீட்டிலிருந்து அசுசியான ஜலமுதலியவை இக்கால்களின்வழியாய்ஓடும். இந்தஜலதாரைகளை நாள்தோறும் சுத்திசெய்யாவிட்டால் அவை துர்க்கந்தம்வீசும். அவைகளைக் காலையில் ஜலம்விட்டுக்கழுவி, நீரோடிக்கொண்டிருக்கும்படி செய்தால் துர்க்கந்தம் உண்டாகாது. இராஜர்கள் வாசஞ்செய்கிற அரண்மனைகளிலும் சிறந்தவீடு நாம் ஒவ்வொருவருக்கும் உண்டு. அவ்வீடு நம்முடைய ஆத்துமவாசமாகிய இச்சரீரமேயாம். இந்தச் சிறுவீட்டுக்கு ஜலதாரைகள் எத்தனைதெரியுமா? ஏழு லக்ஷமாம்! மனுஷதேசத்தில் இருக்கிற இந்தச்சாலகங்களை ஒன்றோடொன்றாகச் சேர்த்து அளவிட்டால் நீளத்தில் இருபத்தெட்டு மைல் தூரம்போகுமாம். இத்தனை சாலகங்கள் இந்தஉடலில் எங்கேயிருக்கிறதோ காணோம் என்பீர்களோ? இந்தத் தேகத்திற்குக் கவசமாக இருக்கிற தோல்முழுவதும் இவைகளால்நிறைந்திருக்கின்றது. இந்தத்தோலாகிய கவசத்தில் ரூபாய் அவ்வளவு அகலம் குறித்துக்கொண்டு சோதித்தால் அவ்வளவில் மூவாயிரம்ஜலதாரைகள் இருக்கக்காணலாம். இந்தஉடலினிடத்தில்உண்டாகும்அழுக்குமுதலிய அஸு சாரங்களை நிவர்த்திக்க இவை ஏற்பட்டிருக்கின்றன. சாலகத்தையொத்த இந்த ஒவ்வொரு மயிர்க்காலின் வழியாய் இடைவிடாமல்இரவும்பகலும்அசுசியானஜலம் ஓடிக் கொண்டேயிருக்கின்றது. நாம் கஷ்டமானவேலைசெய்கையிலும், வெயிலில் நடக்கையிலும், சூடானபண்டங்களைத்தின்னுகையிலும் இந்த ஜலம் அதிகமாய்ஓடி, தோலின வெளிப்புரத்தில் துளிதுளிகளாய்த்தோன்றிவீழும். இப்படி வடிகிறதை வேர்வையென்று சொல்லுகிறோம். அதனால் உண்டாகிற வேர்வைநாற்றம் சகிக்கத் தகாதென்றறிவோமல்லவா? மிதமான சவுக்கியதசையிலிருக்கிற ஒரு புருஷனுடைய தேகத்திலிருந்து இவ்வாறு வடிகின்றஜலம் நாள்ஒன்றுக்கு ஒரு பெரியபுட்டியை நிரப்புமாம். இந்த ஒருபுட்டிஜலத்தில் அரை ரூபாய்எடை விஷசம்பந்தமான அழுக்குக் கலந்திருக்கும். இந்த மயிர்க்கால்களாகிய சாலகங்களைச் சுத்திசெய்யவேண்டியது அவசியமல்லவா? நாம் இந்தத்தேகத்தை நாள்தோறும் தேய்த்துக் குளிக்கவேண்டும். அப்படிச்செய்தால் சாலகங்களாகியஇந்தமயிர்க்கால்களில் அழுக்கடைத்துக்கொண்டிராது. உள்ளேயிருந்து வெளிப்படுகிற யாவும் தாராளமாய் வெளிப்படும். அப்படிச்செய்யாமல் வெறுமையாயிருந்தால் அழுக்கு அடைபட்டு சிரங்குமுதலிய பிணிகள்விளையும்.

நாம்உடுக்கிற ஆடைகளும், சயனிக்கிற படுக்கைகளும் சுத்தியாகவே யிருக்கவேண்டும். இத்தேகத்திலிருந்து வெளிப்படுகிற அழுக்கு நம்முடையவஸ்திரம் தலையணை முதலியவற்றில் ஒட்டிக்கொள்ளும். அவை இத்தோலோடு சம்பந்தப்பட்டால் அவைகளில் படிந்திருக்கிற அழுக்கு மயிர்க்கால்களை அடைத்து சவுக்கியஈனத்தை விளைவிக்கும்.

அழுகிப்போன தாவரவஸ்துக்களும் பிரேதங்களும் துர்நாற்றம் வீசும். எரு சேர்ந

திருக்கிற குப்பைமேட்டினருகே போவோமானால் அந்த நாற்றத்தையுணருவோம். அழுகிப்போன பதார்த்தங்களிலிருந்து துற்நாற்றம் ஏன் உண்டாகிறது தெரியுமா? அவைகளை நெருங்கிப்போனால் நமக்குகெடுதிநேரிடுமென்றும், நாம்அவைகளைவிட்டுதூரமாய்ப்போக வேண்டுமென்றும் நம்மை எச்சரிக்கும்பொருட்டேதுர்நாற்றம்வீசுகின்றது. இத்தேசத்தில்சம்பவிக்கிறநோய்களில் அநேகம் அசுத்தத்தினாலேயே விளைகின்றன. தூர்க்கந்தமுள்ளசாக்கடைகளும், கசுமாலகுப்பைகளும் வீடுகளுக்கருகே இருக்கின்றன. ஆடு, மாடு, பசு, குதிரைமுதலியவைகளை வீட்டிற்குள்ளேகட்டிவைக்கிறதும்வழக்கமல்லவா? இவையெல்லாம்நோய்க்கு ஆதாரமாம். சில தருணங்களில் இவைகளினாலகொடிய தொத்துவியாதிகள் உண்டாகி, கிராமம்கிராமமாய் அழிக்கும். வாழைப்பழத்தோல் அளவாய் அழுகத்தக்க ஒரு பதார்த்தத்தையும் வீட்டிற்கருகே போட்டு வைக்கலாகாது. அதற்கென்று தூரத்தில் ஓர் பள்ளத்தை வெட்டி க்குப்பையைப்பெருக்கிக்கொண்டுபோய் அதில்கொட்டிவிடவேண்டும். அடிக்கடி குப்பையைக்கொண்டுபோய்த் தூரத்தில்கொட்டுவது வருத்தமாயிருந்தால் ஒரு பெரிய சாலில் அதனைக் கொட்டி மூடிவைத்து உதயத்திலும், அஸ்தமத்திலும் வாரிக்கொண்டுபோய்க் கொட்டிவிடலாம். பட்டணங்களிலுள்ள ஜனங்கள் ஐசுவரியவான்களானாலும், அஷ்டதரித்திரரானாலும் தங்கள் பட்டணங்களையும், தாங்களிருக்கிற வீடுகளையும் சுத்திசெய்து கொள்ளவேண்டும். வாந்திபேதி முதலிய தொத்துவியாதிகள் அனாசாரமாய் இருப்பவர்கள் மத்தியில் உற்பத்தியானாலும், ஆசாரமுள்ளவர்களாயும், நல்லசம்பத்துள்ளவர்களாயும் இருப்பவர்களுடைய உப்பரிகைகளிலும் பிரவேசித்து துயரத்தையுண்டுபண்ணும். நாலைந்து வருஷங்களுக்கு முன் திருவல்லிகேணி துலுக்கர் பேட்டையில் பரவியிருந்த வாந்திபேதி அருகாமையிலிருக்கிற கவர்னர் தோட்டத்திற்பிரவேசித்துமட்ராஸ்ராஜதானிக்கு கவர்னராக அதில் வந்திருந்த ஸர் ஹென்ரி உவார்ட் என்னும், பிரபுவை வாரிக்கொண்டுபோனது இப்பட்டணத்திலுள்ள யாவருக்கும் தெரிந்தேயிருக்கும். உடல் சுத்தியைக்குறித்தும் நகர சுத்தியைக்குறித்தும் இவ்வளவெழுதினோம். இவைகளைவிட விசேஷசுத்தி ஒன்றுண்டு. இஃது உடலையும் அதன் சவுக்கியத்தையும் சேதப்படுத்தும். இவைகளின்பலம், இம்மையோடு அழியுமேயன்றி மறுமைக்குச் செல்லாது. இவைகளிலும் விசேஷித்தசுத்தி ஒன்றுண்டென்றோமே, அது இப்படியல்ல. அது இம்மையிலும் மறுமையிலும்நம்முடையசுகதுக்கங்களுக்குக் காரணமாயிருக்கும். ஆகையால் அதனையடைய நாம் பிரயாசப்படவேண்டும். அந்த சுத்திக்கு ஆத்தும சுத்தியென்றும், இருதயசுத்தியென்றும், சித்த சுத்தியென்றும் பெயர். இயற்கையாய்நம்முடைய இருதயங்கள் பற்பல பாபதோஷங்களால் கெட்டு துற்நாற்றம் வீசுகின்றன. அவைகளைசுத்திசெய்ய நம்மாலாகாது. கசிந்த இந்த ஊற்றைச் சீர்திருத்தத்தேவனாலேயேயாகும். இருதயசுத்திவேண்டியவர்கள் யாவரும் அவருடையஅருளைத்தேடவேண்டும். அவர் ஜீவகாருண்ணியர், ஜகத்திரக்ஷகர், தமது பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் வருஷித்து அவைகளைச் சுத்திசெய்யச் சித்தமாய்க் காத்திருக்கிறார். அவருடைய திவ்விய திருவாய்மொழிகளை உற்றுக்கேளுங்கள். நீங்கள் சுத்தமாகும்படிக்கு உங்கள்பேரிலே சுத்தமான தண்ணீரைத் தெளிப்போம்; நாம்உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடையஎல்லாநரகலான தேவர்களையும் நீக்கி, உங்களைச்சுத்தமாக்கி, உங்களுக்குநவமான இருதயத்தைகொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுத்துஉங்கள் உள்ளத்திலேதம்முடைய ஆவியைத்தந்து, உங்களை நமது கட்டளைகளில் நடக்கவும், நமது நியாயங்களைக்கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவோம். உங்கள் பிதாக்களுக்கு நாம் கொடுத்த தேசத்திலே நீங்கள்குடியிருந்துநமக்குஜனமாயிருப்பீர்கள், நாம்உங்களுக்குப்பராபரனாயிருந்துஉங்கள்அசுத்தங்களையெல்லாம்நீக்கி, உங்களை இரக்ஷித்தருளுவோமென்று திருவாய்மலர்ந்தருளுகிறார்.

## நிருபம்.

ஓம்பிருமமேநமம்:

இன்னிசைவெண்பா.

சீர்வளரும்வேதாந்தஞ் செப்புவதுஓம்பிரும்மம்,
ஏர்வளருமிஷ்டமுர யென்றுந்தியானித்லால்,

சொற்பொருளாதி சுகந்தந்துநிந்தியமாம்,
தற்பொருளியும் நயந்து.

## கீர்த்தனம்.

### இராகம் - கல்லியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

தியானஞ்செய்வோம் இஷ்டரே - ஓம்பிரும்மத்தை,
தியானஞ்செய்வோம் இஷ்டரே.

அநுபல்லவி.

சிருஷ்டிதிதிசங் - காரககர்த்தனை,
சீர்வளர்முத்திநற் - சீவர்க்களிப்போனை......(தியானம்.)

சரணங்கள்.

க. அரிபாதகங்கையை - அரன்சிரங்கொண்டானென்றும்,
அரிகண்ணைப்பிடுங்கி - அரனைப்பூசித்தானென்றும்,
அறையும்புராணநம்பி - அவரவர்போராடி,
ஆத்மபோதமிழந்து - ஆழ்நரகடையாமல்.....................(தியானம்.)

உ. பிரமன்சிரங்கொய்தரன் - பிட்சையெடுத்தானென்றும்,
பிரமன்முகந்தொடையில் - பேரரன்பிறந்தானென்றும்,
பேசுங் * குணார்த்தம்நம்பி - பேதமைபுத்தியால்,
பிணங்கியொருவர்க்கொருவர்-பெருஞ்சண்டைசெய்யாமல்.(தியானம்.)

ங. நான்குவேதங்களும் - நாதன்பிரும்மத்துக்கே,
நான்முகன்நாரணன் - சங்கரன்எனும்பல,
நாமங்கள்சொல்வதால் - நாமதையுன்னியே,
நல்லறிவாற்றினம் - நற்கதிநாடியே..............................(தியானம்.)

இஃது,
பெங்களூர்
ஆ. ஐயாசாமிமுதலியார் இயற்றியது.

---

* குணார்த்தம் - என்பது - கல்பனையாம்.

கூ. அம்முதன்மூவுருப் பாநந்தமென்பர்சிலர், அட்டவுருப்பென்பர்சிலபேர்,
அருளைங்தெழுத்தெனக் கூறுவர்சிலரயன, அரியென்றுரைப்பர்சிலபேர்,
எம்மிறைக்கங்கையணி நாயனெனென்பர்சிலர், ஏசெனுஞ்சொலவர்சிலபேர்,
எட்டாதபேரின்ப சாந்தனெனச்சொலவர்சிலர், ஈடறுகனென்பர்சிலபேர்,
ஜெம்மல்முகம்மதிற சூலெனச்சொல்வர்சிலர், செங்கதிரென்பர்சிலபேர்,
சிதையாதமூலனே யிவர்களனுகூலனே, சிருங்காரமிகுவுள்ளனே,
நிம்பமிலையானேனே வந்தவகைதோணேனே, நீக்குமிருபிணியையனே,
நினையன்றியாளுதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

ச. ஆணோடுபெண்ணும் பவமலியற்றபிர்ம்மமே, யணுவிலுநின்றதிருவே,
அல்லாகுதாயே கோவாதப்பேக்கோமாதி, யடியர்குறிநாமநீயே,
சேணோடுபுவிவாரி முதலணுவுமீறுகச், செய்கிட்டவல்லநீயே,
திருபுவியுமதிலுள்ள பல்லுயிர்களெல்லாம், செத்தாலும்நிற்பநீயே,
பாணோடுபல்லாண்டு தத்துவர்கள்கூவுநின், பாதாரவிந்தமன்றோ,
பசளையானலைந்திடுக விடுவதுநீதமோ, பாருளாபரமேச்சுரா,
நிணேமம்புரியாது கடிகையளவென்கிலும், நிலைநிற்க வழியறிகிலேன்,
நினையன்றியாளுதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

ரு. துமியளவுசுக்கிலஞ் சிறுதசையிற்கண்டுண்டு, துகிரன்னவாகிநின்று,
தோலுதற்கரிதான வுபயோககரணுதி, சோமமறில்செய்துமுடிகீழ்த்,
திமிரமலிசிறுவில்லி லாண்டுமாதல்லியின், தின்மைசிதையாமற்கார்த்து,
திங்கண்மறுகான்கினி லெங்குளோர்புகழவே, திரைபுவியில்படைத்தமுதலய்,
அமிர்தசுவைநீக்கிநீ லுண்ணமுயல்பேயன்போல், அர்ச்சையைபணிந்துபவமை,
அறுத்தாளுமென்றுபல பாவகைகள்கூவினேன், ஆதாயமொன்றுமறியேன்,
நிமிஷமிலும்மையான் கறையறப்போற்றிலேன், நிருமலமானகோவே,
நினையன்றியாளுதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

சூ. வான்பிரதிவேண்டாம லுபகாரஞ்செய்கிசராய், வாழ்நாளெலாங்கார்த்ததை,
வலிபுலனற்றவிரு கொடுபாவீபோலவே, வங்கர்தொழிலால்மறந்தேன்,
வான்றந்தவொலிகிட்ட வோவியபோலவே, வன்புவியில்நின்றேனன்றி,
வரையற்றவசிகளை நினைத்துன்பால்கிட்டாமல், வரிநாமம்நம்பினேனே,
ஏன்செய்ததென்றுநீர் கேளாதுபொறுமையாய், என்றைக்குமாளுந்தாதா,
எங்குநிறைகங்குளறு திங்கண்முதன்படைத்தமா, ஏகவல்லாதிபொருளே,
நீன்மனதைமாற்றிநின் கழல்துதிகள்செய்திட, நேமியிற்கிருபைகூறும்,
நினையன்றியாளுதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

எ. பழுதுற்றவங்கமொடு வாக்குமனமுடனினது, பார்வைபின்முன்னிருந்து,
பகரரியபவம்புரிந் தரியதிருயோகனெனப், பலர்கூவநின்றேனையோ!
கழுதுற்றவுளமதைக் கடிகையளவென்கிலும், சாராதுபிறியவிட்டேன்,
கற்புமலிபற்பலர்க் கடிமங்கைநண்ணியவர், கசந்துருகவிட்டுநல்ல,
பொழுதுற்றகாலையிலு மளிகொண்டேபிழிவான, போதிதனினின்றேன்மிக்க,
பொறியற்றமாந்தருடன் கூடியுபராயுளைப், போக்கினேன்கனமிழந்தேன்,
நிழலற்றபாலையின் மெலிந்திடுமுரசனன, நித்தமும்வாடலானேன்,
நினையன்றியாளுநதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

அ. கமடம்போற்பொறி யைந்தடைக்கிகரணுதியைக், கட்டிநின்பாலில்விட்டு,
கண்பிரதியாலுமது மகிமைதனைக்காணவே, கலியற்றமோழையானேன்,
தமதமிதமாலுண்டி கொண்டனன்றுயிலின்ப, தன்மையையறிந்தபாழன்,
தன்னிகருமில்லையென் வுன்னிதரையெண்ணினேன், தாறுமாறுனமொழியன்
நமன்வருங்காலத்தி லுதவாதகாயமதை, நம்பிமிகமோடிகொண்டேன்,
நாராயணசாமி நாயகனெனுந்தீதன், நகமீதில்நிகருமுண்டோ,
நிமிஷத்தில்நின்னருள் மேவிடில்பவமற்று, நினவனனவாகுமையா,
நினையன்றியாளுநதற் கனவிலுமில்லைகார், நித்தனேபரபிர்ம்மமே.

முற்றிற்று.

இஃது, சிங்கப்பூர் - சித்திரகவி, வெ. நாராயணசாமிநாயகரியற்றியது.

## சந்தேகம்.

கட்டளைக்கலித்துறை.

எட்டாதஞான மிணையாதநீத மிறுகிநிஞ்சம்,
முட்டாதபாத முளையாதசாத முனிவுடனே,
துட்டாதவாசந் துயிலாதபேதந் துதிமலிந்த,
தட்டாததாளி னருள்தங்குதத்துவ போதினியே.

ஆகஸ்டுமாதம் பிரசுரஞ்செய்த தத்துவபோதினியில் "பிரபஞ்சத்தைக் கொள்ளைக்
கொள்ளும் வாந்திபேதிஅம்மைமுதலிய கொடியவியாதிகளும், புயல்காற்று, பெருமழை,
பூகம்பம், பூவரட்டல், க்ஷாமம் இவைகளில் க்ஷாமம்நீக்கிச் சேடமானவைகளுண்டுபடு
ம் மூலாதாரங்களின்னதென்று சூக்குமப்புத்தியுடையோர்கூறுவார். க்ஷாமமுண்டுபடுமூ
லமறிந்து கூறுவதரிது. அது கடவுளை மறந்தியலும் கொடுபாவிகளாகிய நாஸ்திகரறிந்து
உய்யவன்றிவேறன்று" என்கருத்தை விளக்கினீரன்றோ? அஃது.
விதேயன், "இந்தியாவுக்கு" நேர்கிழக்கும் தென்கிழக்கும், ஆஸ்திரேலியாவுக்குவடமேற்
கிலுள்ள "பொர்னி" முதலாம்தீவுகளில் கண்டசெயல்களுக்கிசையவில்லை. எவ்வாறெனில்,
நமதுகண்டத்தில்வசிக்கும்பெரும்பானமையோர் "நொள்ளைக்கண்ணனைச்செந்தாமரைக்
கண்ணன்" என்றுமூடர்கொண்டாடுவதுபோல், சண்ணுளர்களால்தட்டி, யடித்து, மிதித்து,
உதைத்து, உருக்கி, தேய்த்து, மினிக்கிவைத்தவிக்கிரகங்களைச்சருவவல்லநாயகனென்று
கொண்டாடி மறவாதிருக்கிறார்கள். அவ்வாறுகிலுங்கூறிய தீவுகளிலும் சிங்கபூர்முத
லாம்தீவுகளில் வசிப்போர்களிற் பெரும்பான்மையோர் தேவனையறியாமலும், அறிந்து
ம் மறந்து கொடிதானகொலைகள்செய்து சிரசுகளையும் மட்சாடிகளையுந் தெய்வமென்று
பாராட்டிகுடி, சூது, வியபசாரம், பொய், வஞ்சகம், களவு, முதலான பாதக்கிரிகைபுரி
வதை தேசசரித்திரங்களை வாசித்தோரும் கண்ணாரக்கண்டோர்களுமறிந்த சத்தியமல்ல
வோ? அவ்வாறிருக்க, சுட்டியதீவுகளில் "வேதமோதிய வேதியர்க்கோர்மழை" "அரிசி
வித்திடுமந்தணர்க்கோர்மழை" என்னும் செய்யுளின்கருத்துக்கும் மாறாக வாரத்தில்-இர
ண்டுமூன்றுவிசை மழைபொழிவதின் ஞாயமென்ன?

இவர்கள்செய்யும் அக்கிரமங்களை, ஈசன் மன்னித்தாளுகிருரோ ?

௧௮௬௬-ஞ ஆகஸ்டுமீ-௩௰௳
சிங்கப்பூர்.

இங்ஙனம், சந்தேகங்கொண்ட விதேயன்,
வெ. நாராயணசாமிநாயகன்.

## ௧ - வதுஸ்துதி.

### தேவகாயத்திரிபொருள்.

### ஆசிரியவிருத்தம்.

௧. சிருட்டிதிதிசம்ஹாரகருத்ருகாமோக்ஷமருள் சர்வக்கியசர்வசக்தா.
சத்ஸ்வரூபாதிருசியசன்மார்க்கநெறியருள் சச்சிதாநந்தரூபா,
நிருவிகற்பப்பொருளேநித்தியநிர்மலபுருஷ நினையெங்களன்பினாலும்,
நின்பொருட்டாயபலநீதிபடுசெயலாலும் நித்தமும்பணிகின்றனம்,
சிருட்டிதிதிலயமானசீர்ப்படுந்தொழிலரசெ திரிலோகவியாபியாகி,
தினகரன்முதலாகயாவைவும்ஆள்கின்ற திவ்வியதேஜத்திரட்டே,
திருமருவுகருணையொடுஎம்மனோவிருத்திகளைச் சீராகஏவுகின்ற,
திவ்வியசவிதாவேநினைதியானித்தெனாளுமென் சிந்தையிலிருத்தவருளாய்.

௨. எத்தேவனீங்குள்ளயாவற்றையுண்டாக்கி யாவையும்ரக்ஷிப்பனோ,
எவனிடததிங்குள்ளயாவுஞ்சனிக்குமோ யாவுமீண்டும்லயிக்கும்,
அத்தேவனையபரமாத்மனேயல்லவோ அருமையொடுஎமதுமனதை,
அரியமோக்ஷம்பொருட்டாயசன்மார்க்கத்தில் அன்புடனேஏவுகின்றான்,
பத்தியொடுவாதலின்அப்பரமசவிதாவின் பரமபதமென்மேலுமே,
பாடித்துதித்தாடிபரவசமதாய்மனம் பற்றவகைதேடுவோமே,
சுத்தபரிபூரணமதானபெருஜோதியும் சூரியதேஜஸ்கடந்த,
சுகமருள்புரிகின்றஞானஒளிவீசு சுயபிரகாசனைநினைகுவாம்.

௩. புருஷோத்தமாமஹாபுருஷனாகியதேவ புனிதனேநினதருளையே,
பூர்ணமாய்நாடியெப்புனைகளையும்கைவிட்டு புன்மதிஅகன்றபின்னும்,
சிருட்டியிலடங்குபூதங்களைதொழாமலுஞ் சத்தியமார்க்கத்தில்தானெஞ்,
சித்தம்பிரவர்த்திக்கசிந்தையில் குடிகொண்டு செம்மலேகாத்தருளுவாய்,
சருவசாங்கேதகமதாயசருமங்களை சாங்கமாய்விட்டொழித்து,
சாசுவதபதமுடையசாமிநினையொருவனையெ சரணமடைகின்றேமய்யா,
சருவவல்லமையுள்ளகர்த்தனே முக்தனே சாக்ஷாத்பரப்பிரமனே,
சகலபாபங்களின்னின்றெமைதவிர்த்தருள் சாந்தபதமாள்தெய்வமே.

———

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்.—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் ,பதிப்பிக்கப்பட்டது.